கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கம்
Coventry Tamil Welfare Association

http:// HYPERLINK http://www.tamils.org.uk
www.tamils.org.uk
Email: coventrytamils2002@gmail.com

தலைவர்:- உயர்திரு க.அரியரத்தினம். 07823535094

கார்த்திகை மாத இதழ்
NEWS BULLETIN
NOVEMBER 2020
ஆக்கம்:- ஸ்ரீ.பகீரதன்

நாள்	நிகழ்வு
12/09/20 முதல்	புதிய தவணைக்கான தமிழ்ப்பாட , கலைப்பாட வகுப்புகள் Zoom செயலி மூலம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. President Kennedy பாடசாலை வாடகைக்குக் கிடைத்ததும், அங்கு வகுப்புகள் தொடரும். உங்கள் ஒவ்வொருவருக்கும், Zoom இணையத்தள அடையாள தொடர்பு விபரம் தனித்தனியாக அனுப்பி வைக்கப்படும். சென்ற தவணை தமிழ் வகுப்புகள் இலவசமாக இடம்பெற்றன. இந்தத் தவணை, ஆசிரிய வேதனத்துக்காக ஒரு தவணைக்கு £25 அல்லது ஒரு வருடத்திற்கு (மூன்று தவணைகள்) £70 அறவிடப்படுகிறது. கலைப்பாட ஆசிரியர்களின் தொடர்புகளுக்கு கர்நாடக சங்கீதம் திரு.தீனதயாளன் 07886969194 திருமதி.வானதி 07523431759 பரதநாட்டியம் திருமதி சத்தியகௌரி 07773591591 திருமதி அஜந்தா 07425577697 மிருதங்கம் - செல்வன்.தனுஜன் 07582418364 வீணை - செல்வி.சாத்விகா 07556130208 மேலும் தகவல்களைப் பெற்றுக்கொள்ள திருமதி பொன்மணி 07436542925 அவர்களைத் தொடர்பு கொள்ளவும். கொவன்றி தமிழ்மொழிக் கலைக்கழகம், கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கம்.

கார்த்திகை மாதத்தில் கடந்து போனவைகள்

வரலாறுகளின் அடிப்படையில், இன்று மட்டுமல்ல தொன்று தொட்டு, தமிழர்கள் வாழ்வில் போராட்டம் என்பது பெரும் அங்கம் வகித்து இருக்கின்றது. அது கடவுளர்களாக இருக்கட்டும் மனிதர்களாக இருக்கட்டும் எதையுமே போராடியே தீர்வு காண வேண்டிய நிர்ப்பந்தம் இருந்திருக்கின்றது. கொடுமைகள் எல்லை மீறப்பட்டபோது, பொறுமைகள் இழக்கப் பட்டிருக்கின்றன.


மகிஷாசுரனின் கொடுமைகளைத் தாங்க முடியாது, தேவர்கள் முறையிட்டதால், பொறுமையிழந்த சக்தி அவனை வதம் செய்தார். அதை நாம் நவராத்திரி என்று கொண்டாடுகின்றோம்.

நரகாசுரனின் கொடுமைகள் அதிகரித்தபோது, போர் புரிந்து, அவனை அழித்த தினத்தைத் தீபாவளி என்று கொண்டாடுகின்றோம்.

சூரனின் கொடுமைகள் அதிகரித்த போது, பொறுமையிழந்த முருகன் சூரனையும், அவன் தம்பிகளையும் கொன்றொழித்த தினத்தைக் கந்தசஷ்டி விரதமிருந்து வழிபடுகின்றோம்.

இவையெல்லாம் நமது முப்பாட்டன், பூட்டன், பாட்டன் செவிவழிகேட்டதும், பாட நூல்களில் படித்ததும் என்று காலங்காலமாய் எமது பரம்பரைக்குக் கடத்தப்பட்டும் நடத்தப்பட்டும் கொண்டிருக்கின்றன.

அதுபோலவே எமது காலத்தில் நடைபெற்ற எமது இருப்புக்கான போரும், அதற்காகத் தம் உயிர்களை ஆகுதியாக்கிய மறவர்களின் தியாகங்களும், அர்ப்பணிப்புகளும் எதிர்கால சந்ததிக்கு எடுத்துச் சொல்லவேண்டியதும் எமது கடமையே.



வீரவணக்கம் மாவீரர்களே!

அன்னை மடியில் பிறந்தீர்களே
மண்ணின் அடியில் விதையானீர்களே
விடியலை நோக்கி விரைந்தீர்களே
வீரவணக்கம் மகா மாவீரர்களே

ஈழம் அமைக்கச் சென்றீர்களே
ஈனப் பிறவிகள் தாக்கி கொன்றனரே
தமிழர் மண்ணில் விதையானீர்களே
தமிழீழப்பாதை விரிட்சமாகியதே

உயிரில் கலந்த உன்னத உறவுகளே
அணையாத ஒளித்தியாக தீபங்களே
துயிலும் இல்லத்தின் வீர விருட்சங்களே
நினைவஞ்சலி செய்கிறோம் மாவீரர்களே.

வி. அற்புதன்
தரம் – 04

உலக சாதனையில்
கொவன்றி தமிழர் நலன்புரிச்சங்கம்

உலக நாடுகளை அச்சுறுத்தி மக்களை எல்லாம் பயமுறுத்தி வீட்டில் முடங்க வைத்த, மாபெரும் கொரோனா எனும் கொடிய நோய் *விழிப்புணர்வுக்காக* உலகத் தமிழர்கள் பங்கேற்ற உலக சாதனை நிகழ்வு.

தொடர்ச்சியாக 24 மணி நேரம், 24 நாடுகளிலிருந்து 24 தலைமையின் கீழ்* மற்றும் பல எண்ணற்ற தமிழ் ஆர்வலர்களும் கலந்து கொண்ட தொடர் நிகழ்வில் UK இன் தலைமையாகக் கொவன்றி தமிழர் நலன் புரிசங்க தமிழ்ப் பாடசாலை தலைமை ஆசிரியர் திருமதி ரஜனி உதயசேகரன் தலைமையேற்று, கொவன்றி தமிழர் நலன் புரிசங்கத்திலிருந்து,
திருமதி பாயிஷா அபுசாலி
CTWA தமிழ் ஆசிரியர்
கொரோனா நீ.....! (கவிதை)
செல்வன் மாதவ் கேதீஸ்வரராஜா
CTWA மாணவன்.
உலகை ஆட்டிப் படைக்கும் கொரோனா (பேச்சு)
செல்வி மாதுமை சச்சிதானந்தம்
CTWA பழைய மாணவி, உதவி ஆசிரியர்.
விஞ்ஞானமும் கொரோனாவும் (பேச்சு)
திருமதி சுமித்ரா கேதீஸ்வரராஜா
CTWA உறுப்பினர்.
தன்னிலை உணர்த்தும் கொரோனா (கவிதை)
போன்றோர் பங்குபற்றி உலக சாதனையில் இடம் பிடித்தனர்.





கொரோனா நீ.....!

சீன தேசத்து,
வூஹானில் பிறந்து,
வீசா இன்றி
விமானத்தில் ஏறி,
பாஸ்போர்ட் இன்றிப்
பல நாடுகளுக்குள் புகுந்த,
பார்வைக்குப் புலப்படாத
பயங்கரவாதியோ நீ.....!

சாதி, மதம் என்று
சண்டையிட்ட சனங்களிடையே
சமத்துவத்தைக் காக்க வந்த
சமாதான நீதவானோ நீ.....!

வல்லவனுக்கு வல்லவன்
வையகத்தில் உண்டு என்று
வல்லரசு நாடுகளையும்
வளைத்துப் பிடித்து
பாடம் புகட்ட வந்த
பகவானோ நீ.....!

கை கழுவிக் கால் கழுவி
கடவுளை வணங்கிய
கலாச்சாரக் கடமைகளைக்
கவனமின்றிக் கைவிட்டதால்
கண்ட பலனோ நீ...!

என்னவோ என்றாலும்
கொரோனா நீ.....!

பிறந்த நாடு விட்டு
பல்வேறு காரணமாய்
புலம்பெயர்ந்த எங்களையும்
பதம் பார்த்து விட்டாயே!

தன்னுயிரைப் பாராது
பிற உயிரைக் காப்பாற்றும்
வைத்தியரைக் கூட
விட்டு வைக்கவில்லையே நீ....!

காய்த்த மரங்கள்தான்
கல்லெறி படுவது போல்
முதியோர் இல்லம் புகுந்து
மூர்க்கத்தனமாய்
மூச்சிரைக்கக் கொன்றாயே!

உற்றார் உறவினரும்
சுற்றத்தாரும் சூழ்ந்து வர
மரணச்சடங்கையேனும்
மனதாரச் செய்ய விடாமல்

பொலித்தீன் பையிலிட்டுப்
பல மீற்றர் தள்ளி நின்று
படுகுழியில் தள்ளுவதைப்
பார்க்க முடியவில்லையே!

பட்ட துயரம் சொல்ல
கவியொன்று போதாது
பொறுத்தது போதும் இனி
போய்விடு கொரோனா நீ....!

நன்றி
திருமதி பாயிசா அபூசாலி
தமிழாசிரியை.

தமிழ் அகரம்!

அன்புகாட்டும் தமிழ்
ஆசான் கற்பிக்கும் தமிழ்
இனிய மொழியாம் தமிழ்
ஈகையை உணர்த்தும் தமிழ்
உண்மையை உரைக்கும் தமிழ்
ஊக்கமளிப்பதுவும் தமிழ்
எண்ணுவதும் எழுதுவதும் தமிழ்
ஏற்றமளிப்பதுவும் தமிழ்
ஐம்புலன்களையும் அடக்கும் தமிழ்
ஒற்றுமையை வளர்க்கும் தமிழ்
ஓங்கிநிற்கும் தமிழ்
ஔவை பாடிய தமிழ்
முதுமொழியாம் தமிழ்
தாய் மொழியாம் தமிழ்
கசடு அற கற்போம் தமிழை!

நன்றி
செல்வன் டிர்த்தீன் ஜெயதீஸ்வரன்
தரம் 1

யுத்தம்

ஆயிரம் ஆண்டுகள் கடந்தாலும் பெண்ணே
உன் ஆடைதனை விலக்குவதை
ஆர்வத்துடன் செய்யும் அர்த்தமற்ற இவ்வுலகில்
தன் ஆண்மையைக் காட்டும் ஆடவர் நடுவிலே
நீ யுத்தம் செய் பெண்ணே!

வீட்டை விட்டு வெளியேறியவள்,
தெருமுனையில் களவாடப்பட்டாள்
காற்புணர்வு கொண்ட காடையர்களால்,
கண்ணீரால் கரைந்தாளே கன்னியும்

கடத்தினார்கள் காட்டு பங்களாவுக்குள்
கானகமே அதிர்ந்தது கட்டழகி அவள்
கதறிய கண்ணீரால்
ஈரக்குலையே நடுங்குமளவுக்கு அந்த அலறலும்
ஈனப்பிறவிகளுக்கு இரையாகும்
இந்தச் சிறுமிகளும்

இரத்தமும் சதையும் பிஞ்ச கோலத்தில்
மஞ்சத்தைக் கொண்டாடுகிறான்
தன் விஷப் பற்களால்!
காம வஞ்சகர் மத்தியில் மூச்சுக்காற்றில்
கருகியே சடலங்கள் ஆகின்றன - நம்
வீட்டுக் குத்து விளக்குகள்!

இளமையைக் காணும் பருவங்களில்
இரக்கமற்ற மிருகங்களால்,
பூமேனி செயலிழந்து விழுந்திட
எத்தனை முறைதான் இறப்பது
இப்படியான இம்சைகளால்.....

நித்தம் ஒரு யுத்தத்தினால் சித்தங் கலங்கி
பித்தம் தெளிந்து சிந்தை தெளிவுறல்
வீழ்த்தியும் விழுந்து விடாத பெண்ணே நீ
உயிர் தாங்கும் உடல் என உருவெடுத்த உன்
உடலுக்குள் இருந்து உயிராய் வந்தவனே
உன்னைப் பூசிக்கப் பசியெடுத்த பாதகனை
வதம் செய்ய நீ எழுந்து யுத்தம் செய்!

ஓநாய்களின் ஓலத்திற்கு
உன் தோல் இரையாகும் அக்கணமே
தேகம் காக்க உறங்காமல்
பெண்ணியம் பேசும் பேருலகினில் உன்னை
வன்கொடுமை செய்யும் நஞ்சகன் நடுவே
நீ கர்ச்சிக்கும் சிங்கப்பெண்ணாய்
விழித்திருந்து யுத்தம் செய் மகளே!

நன்றி
கவிஞர் ஜே. ரஜனி
தமிழாசிரியை



பிரித்தானியாவில் தமிழ்மொழியின் பெருமையை எம் இளைய தலைமுறையினருக்கு உணர்த்துவது சம்பந்தமான கலந்துரையாடல்

பிரித்தானியாவில் வாழும் நாம், எமது இளைய தலைமுறையினருக்கு எமது தாய்மொழியாம் தமிழின் பெருமையை எப்படி உணர்த்துவது? எதிர்காலத்தில் எமது சந்ததியினர் தமிழை ஒரு பாடமாகக் கற்று, பிரித்தானியாவின் அரச அங்கீகாரத்தோடு நடைபெறுகின்ற பரிட்சையை எழுதுவதன் மூலம் அவர்களுடைய வாழ்க்கையில் தமிழ் ஒரு மொழியாக மட்டுமல்ல எமது இனத்தின் இருப்பாகவும் மாற வேண்டும் என்ற உயரிய நோக்கத்தோடு, கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கம், பிரித்தானிய தமிழ்ப் பரீட்சைச் சபை, மற்றும் ஏனைய தமிழ்ப் பாடசாலைகளோடு ஒரு கலந்துரையாடலை நடத்தியிருக்கிறது.

இதன்மூலம், தமிழ்ப் பாடசாலைகள் தங்களுடைய ஒற்றுமையைக் காட்டுவதன் மூலம் மட்டுமே நாங்கள் இழந்த தமிழின் அங்கீகாரத்தை, பிரித்தானிய அரசாங்கத்திடம் மீளப்பெற முடியும். எனவே அதற்கான அடுத்த கட்ட நகர்வுகளை மிக விரைவாக மேற்கொள்ள வேண்டிய நிலையில் இருக்கின்றோம்.

கார்த்திகைத் தீபம்

கார்த்திகை விளக்குத் திருவிழா தமிழர்களின் சிறப்பான வழிபாடுகளில் ஒன்று. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக கொண்டாடப்படுகிறது. கார்த்திகை தீப வழிபாட்டிற்கு அகல் விளக்குகளே அதிகமாக பயன்படுத்தப்படுகின்றன.

கிருதயுகத்தில் ஒரு கார்த்திகை மாத பௌர்ணமி நாளில், முக்கண்ணன், தன் முறுவலாலேயே முப்புரங்களையும் எரித்து திரிபுரதகனம் நடத்தினார். திரிபுரதகனத்தின் போது, சிவனின் சிரிப்பொலி உலகெங்கும் பரவி, ஜோதியாகப் பிரகாசித்து உலகையே ஒளிவெள்ளத்தில் ஆழ்த்தியது. தீய சக்திகளுக்கு அக்னி பிழம்பாகவும், உலகிற்கு வெளிச்சமாகவும் விளங்கிய சிவனின் அந்த பிரகாசத்தினை வழிபடும் விதத்தில் தான் இந்தக் கார்த்திகைத் தீப உற்சவம் கொண்டாடப்படுகின்றது.

தீபம் ஏற்றுவதற்குக் காரணம், அதற்கான அறிவியல் பின்னணி இந்தக் கலாச்சாரத்தைப் பொறுத்தவரை, எதை செய்தாலும் அதை மனித நல்வாழ்விற்கு வழிவகுக்கும் வகையில், விஞ்ஞான ரீதியாகவே செய்தார்கள். மனிதனின் நல்வாழ்வு, அவனின் உள்நிலை வளர்ச்சிக்கு உதவுவதோடு, அவன் முக்தியை நாடி செல்வதற்கும் வழி செய்கிறது. இவ்வகையில், விளக்கு ஏற்றுவது முக்கியத்துவம் பெறுகிறது. ஏனெனில், நாம் பார்த்து உணர்வதற்கு, ஒளி மிக அத்தியாவசியம். நம்மைச் சுற்றி இருக்கும் உலகத்தை நாம் புரிந்துகொள்வதில் நம் பார்வை பெரும் பங்கை வகிக்கிறது.